நாவாந்துறைப் படிப்பகம்
யாழ்ப்பாணம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1518)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 18 சனிக்கிழமை (24-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 66

## ஜனாதிபதி சந்திரிகா; பிரதமர் வாஜ்பாய் சந்திப்பு

### இனவிவகாரம் குறித்து ஆராய்ந்தனர்

(புதுடில்லி)

இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயையும், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கையும் நேற்று சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் பிரதமர் வாஜ்பாயை சந்திப்பது இது முதல் தடவையாகும்.

இச்சந்திப்பின் போது நீண்டகாலமாக தீர்த்துவைக்கப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு இதுவரை எடுத்தவந்த நடவடிக்கைகள் சம்மந்தமாகவும். பிரதமர் வாஜ்பாய்க்கு விளக்கிக் கூறினார்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் நடுநிலை ஏற்பாட்டாளராகசெயற்பட்டு வரும் நோர்வே அரசுவிடுதலைப்புலிகளுடனும் ஏனைய தமிழ் சிங்கள அரசியல் கட்சிகளுடனும் நடத்திய பேச்சுக்கள், மற்றும் தூதுவர் எரிக் சோல் ஹெய்முடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாகவும் இருதலைவர்களும் உரையாடியுள்ளனர்.

இலங்கையில் தன்னம்பிக்கைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படாத வகையில் சகல தரப்பினரும்

→ 8-ம் பக்கம் பார்க்க

## அரிசி விலை குறைப்பு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அரிசியின் விலையைக் குறைக்க நடவடிக்கையெடுத்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ சிவப்பரிசியின் விலை மூன்று ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இப் புதிய விலை இன்றிலிருந்து அமுலுக்கு வருமென உணவு சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (ந-4)

## ★ 3-வது தடவையும் யுத்த நிறுத்தம் நிராகரிப்பு

# புலிகளுடன் விரைவில் பேசி நிரந்தர தீர்வைக் காணவே விரும்புகிறேன்!

### ரி.என்.என். தொலைக்காட்சியில் ஜனாதிபதி



(புதுடில்லி)

இலங்கையின் இனப் பிரச்சினையைத் திர்த்துவைப்பதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எவ்வளவு விரைவாகப் பேசமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பேசுவதற்கு விருப்பம் கொண்டுள்ளேன்.

ஆனால்விடுதலைப்புலிகளினால்தற்போது அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தத்தை நான் நிராகரித்து நிரந்தர சமாதானத்தையே நான் காண விரும்புகிறேன்.

இன்று அதிகாலை புதுடில்லியில் வைத்து ரி.என்.என் தொலைக்காட்சிக்குவழங்கிய பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப் புலிகளுடன் காணப்படும் சமாதானம் நிலையானதொரு சமாதானமாக இருக்கவேண்டும் என்பதே எனதுமுழுவிருப்பமாகும்

விடுதலைப் புலிகள் தமது வலிமையை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த யுத்த நிறுத்தஅறிவிப்பை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 40 சத வீதத்தினால் சுங்க வரி அதிகரிப்பு

(கொழும்பு)

வேற்று நாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான சுங்கவரி 40 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதியமச்சு அறிவித்துள்ளது.

கடந்த புதனிலிருந்து நடைமுறைக்கு வரும் இவ்வதிகரிப்பின் நோக்கம் இறக்குமதியை கட்டுப்படுத்துவதே என நிதியமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

அதேவேளை உணவு, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி மீது உயர் வரி விதிக்கப் போவதில்லையென அரசு உறுதி அளித்துள்ளது. (உ-9)

## யுத்தநிறுத்த அறிவிப்பிற்கு தமிழ்க்கட்சிகள் வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் விடுத்த மூன்றாவது யுத்த நிறுத்த அறிவிற்பிற்கு தமிழ்க்கட்சிகள் வரவேற்பும் பாராட்டும் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சியை தீவிர அக்கறை காட்டி வரும் இவ்வேளையில் அரசாங்கம் எந்தவித பதிலும் அளிக்காமல் மௌனம் காட்டி ரு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபர்களுக்கு அவசர உத்தரவு

வவுனியா

மாவட்ட ரீதியாகஅரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உன்னிப்பாகக் கவனிக்குமாறு வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச அதிபர்களுக்கு அவசரஉத்தரவொன்றை வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி கிருஷ்ணமூர்த்தி பிறப்பித்துள்ளார்.

கடந்தகாலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களினால்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக ஐக்கிய தேசியக்கட்சி நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார பத்திரிகையாளர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

### பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

## யாழ்.மாநகர சுகாதாரப் பகுதி ஊழியர்கள் இன்று கறுப்பு பட்டி போராட்டத்தில் ஈடுபடுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து இன்று கறுப்புப் பட்டிப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய ஆணையாளரின் போக்கினால் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனின் சேவையை மக்களோ நாமோ இழக்கத் தயாரில்லை என்பதை மாநகர சபை நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டும் முதற்கட்ட நடவடிக்கையாகவே இக் கறுப்புப்பட்டிப் போராட்டம் நடத்தப்படுகிறது.

இது தொடர்பாக தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; இன்று சுகாதாரப் பகுதி ஊழியர்கள், சுத்தி கரிப்புத் தொழிலாளர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்து தமது கடமையில்ஈடுபடுவரெனவும், இப் போராட்டத்திற்கு சரியான பதில் கிடைக்காவிட்டால் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரப் பகுதி ஊழியர்களால் முன் வைக்கப்பட்ட

→ 8-ம் பக்கம் பார்க்க

## திருமலையில் சடலம்

(திருகோணமலை)

திருகோணமலை உட்துறைமுகவீதியில் அடுத்துள்ளதுறைமுக கடலோரப் பகுதியில் இனந்தெரியாத சடலம்ஒன்று நேற்றுக் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இச்சடலம் தொடர்பான விசாரணைகள் மேகொள்ளப்பட்டுவருகிறது (ந-5)

## சிறு விளம்பரம்

### தவறி விட்டது

திருமதி சரஸ்வதிசுந்தரலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 456752136 V) விசேட அடையாள அட்டையும் (இல.090232781) அடங்கிய சைப்பை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'வலம்புரி'க் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [கி/ 1521]

## 15 பேர் கைது

(கொழும்பு)

சிவராத்திரி தினத்தன்று வெள்ளவத்தைப் பகுதியில் 15 தமிழ் இளைஞர்கள் யுவதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் வெள்ளவத்தைப் பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதையடுத்து இடம்பெற்ற தேடுதலின் போது வேலைக்குச் சென்ற தமிழ் இளைஞர்களும், யுவதிகளுமே கைது செய்யப்பட்டவராவர். (வ)

## விளையாட்டு மைதான விவகாரம்

# மெய்கண்டான் ம.வி.ஆசிரியர்கள் மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரை கடுமையாக தாக்கி கொலை செய்ய முயற்சித்த சம்பவத்தை கண்டித்தும் அதற்கு உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் அப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நேற்று முன்தினம் காலை பகிஸ்கரிப்பு போராட்டம் ஒன்றை வலிமேற்கு பிரதேச சபை முன்றலில் மேற்கொண்டனர்.

மேற்படி பாடசாலையின் விளையாட்டு மைதானத்தினை அயலில் வசிப்பவர்கள் உரிமை கோரி கடந்த பல வருடங்களாக பல்வேறு குழப்பங்களை விளைவித்து வருகின்றனர்.

இதன்காரணமாக பாடசாலையின் விளையாட்டுப் போட்டி கடந்த 10 வருடங்களாக காவல்துறையினரதும் பின்னர் இராணுவபொலிஸ் பாதுகாப்புடனும் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்கையில் இது விடயம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, மைதானத்தை பாடசாலை நிர்வாகம் பயன்படுத்தவும், இதற்கு ஊறு விளைவிப்போர் மீது நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் சுமத்தப்படும் எனவும் கடந்த வருடம் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற பாடசாலை விளையாட்டு போட்டியைக் குழப்ப விஷமிகள் எடுத்தமுயற்சிபொலிஸாரால் முறியடிக்கப்பட்டதாகவும்,

இதனைப் பொறுக்க முடியாதவர்கள் விளையாட்டு போட்டி முடிவடைந்த மறு தினம் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரான ம துரைசிங்கம் என்பவரை கடுமையாக தாக்கி கொலை செய்ய முயன்றதாகவும்,

இதனைக் கண்டித்து மாணவர்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட போதிலும், இது விடயத்தில் சாதகமான முடிவு எடுப்பதென வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் உறுதிமொழி வழங்கியதையடுத்து மாணவர்கள் ஆசிரியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு வழமை நிலைக்குத் திரும்பியதாகவும் அறியமுடிகிறது. (உ-12-113)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கணேச வித்தியாசாலை, ஊரெழு சி.சி.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இ.குலசிங்கம் தலைமையில நடைபெறும் இப் போட்டிக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். [செ-57]

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் மைக்கல் ஆஞ்சலோ அன்ரோனியோனி இயக்கிய பிரெஞ்சு திரைப்படமான 'பார் டெலா லெஸ் நௌகெஸ்' எனும் திரைப்படம் இன்று மு ப 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (உ)

## 8 பேரும் யாழ் சிறையில்

திருகோணமலையிலிருந்து சிற்றி ஒவ் றிங்கோ கப்பலில் அழைத்து வரப்பட்ட கைதிகள் 9 பேரில் தப்பி ஓடிய ஒருவர் போக மீதி 8 பேரும் யா/சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். (உ-12)

## கியூமெடிக்கா நிறுவனத்தின் மருத்துவக்குழு வளலாயில் நடமாடும் மருத்துவ சேவை

(ஆவரங்கால்)

வலிகிழக்கின் வளலாய் கிராமத்தில் இம்மாதம் முதல் கியூமெடிக்கா நிறுவனத்தின் மருத்துவக்குழு நடமாடும் மருத்துவ சேவையை நடத்தி வருகின்றது.

வாரத்தில் சனிக்கிழமை தோறும் வைத்தியர் லயன் எஸ். எஸ் அருளானந்தம் தலைமையிலான குழுவினர் மு ப. 9 மணி முதல் பி ப 3. 00 மணிவரை இம் மருத்துவ சேவையை வழங்கி வருகின்றனர்.

மேற்படி மருத்துவ சேவையில் சகலவித மான நோய்களுக்கும் மருந்துகள் வழங்கப்படுவதோடுசிறுநீர், குருதிப் பரிசோதனைகளும் இடம் பெறுவதாக அப் பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து 3 கிலோமீற்றர் கடந்துசென்று அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மருத்துவ சேவையைப் பெற்று வரும் சிரமம் ஓரளவு குறைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-57)

## உல்லாச விடுதி உரிமையாளர் கொலை

(கொழும்பு)

கொழும்பு மொறட்டுவவிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்றின் உரிமையாளர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தில்; நெதர்லாந்தைச் சேர்ந்த எச். மத்தஸ் (வயது 70) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவரது கை, கால்கள் கட்டப்பட்டு துவாய்ஒன்றினால் கழுத்து இறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ)

## வறிய குடும்பத்தைச் சேர்ந்த சிறுமியின் உயிரைக்காக்க இளைஞர்கள் நிதிசேகரிப்பு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஊர்காவற்றுறைப்பகுதியைச் சேர்ந்த செல்வி செபமாலை முத்து விஜினா [வயது 15] என்பவருக்கு இருதயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டி சிகிச்சைக்குநிதி உதவிவழங்க இளைஞர் கழகங்களின் மட்டத்தில் நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

நிதிவசதி அற்றவறிய குடும்பத்தைச் சேர்ந்த இச் சிறுமிக்கு சிகிச்சை அளிக்க நிதியுதவியினை தருமாறு குடும்பத்தினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இளைஞர் கழக மட்டத்தில் நிதி சேகரிக்க முடிவு செய்துள்ளதாக ஊர்காவற்றுறை இளைஞர்கழகங்களின் பிரதேச சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

விரைவில் நிதி சேகரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கைகளினை செய்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [உ-75]

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ''ஓவர்'' ''கிரிக்கெட்'' சுற்றுப் போட்டி இன்று தொடக்கம் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை மேற்படி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 'தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் 3 ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. [உ-15]

## முன்பள்ளி மாணவர்க்கு போஷாக்குணவு திட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதயசூரியன் சனசமூக நிலையத்தின்முன்பள்ளி மாணவர்களுக்கு போஷாக்குணவு வழங்கும் திட்டத்தின் முதற் சட்டமாக நேற்று முன்தினம் சுன்னாகப் பிரிவு ஈ.பி.டி.பி இணைப்பாளர் கோ கமலசேகரனால் ஜீவாகாரப் பைக்கற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இப் போஷாக்குத் திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆராயப்பட்டு வருவதாக மேற்படி சனசமூக நிலையத்தின் செயலாளர் ந. இராகவன் தெரிவித்துள்ளார்

இவ்வாறானதொரு சத்துணவு வழங்கும் நிகழ்வு இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்திலும இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## கண்ணி வெடிகள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 19 ஆம் திகதி கைதடிப் பகுதியில் 11 நிலக்கண்ணிவெடிகளை படையினர் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்திருப்பதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ-9)

## மதுசார உற்பத்திநிலையம் நாரந்தனையில் அமைக்க அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

செறிவு குறைந்த மதுசார உற்பத்திநிலையத்தை நாரந்தனையில் அமைத்துத் தருமாறு ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது

மேற்படி சங்கம்கடந்த காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை மூவாயிரம் போத்தல் கள்ளினை திக்கம் வடிசாலைக்கு அனுப்பியது

இப்பணி தற்போது தடைப்பட்டுள்ளமையினால் அக் கள்ளினைப் பயன்படுத்தி மதுசார உற்பத்தியை மேற்கொள்ள தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது. (உ-இ)


## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

கரப்பந்தாட்ட (புதிய) மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை 25ஆம் திகதி பிற்பகல் 3 00மணி தொடக்கம் நல்லூர் சாதனா பாடசாலையில் பரீட்சைத் தலைவர் கே. மனோகரன் அவர்களின் நெறிப்படுத்தலில் ஆரம்பமாக உள்ளது.

இப் பயிற்சி வகுப்புக்களில் க. பொ. த (சா/ த) இல் சித்தியெய்திய 20 வயதிற்கு மேற்பட்டவர்கள், கரப்பந்தாட்டத்தில் ஆர்வமுள்ளவர் எவரும் பங்கு கொள்ளலாம்.

கப்டன் ஜி. எ. எம். குணசிங்கம்
தலைவர்,
யாழ். கரப்பந்தாட்ட சமாசம்
(கி/ 1519)


## மோட்டார் சைக்கிள் விபத்தில் செயலக ஊழியர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை நிலத்தில் விழுந்த கச்சேரி ஊழியர் தலைப் பகுதியில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூர் செட்டித்தெருவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செந்திவேலு காந்தி (வயது 57) என்பவரே காயமடைந்தவராவார். (உ-104)


முகாமை கற்கையியல் வணிக பீடம்
வணிகமாணித் தேர்வு
பகுதி - 1
முதல் அரையாண்டுப் பரீட்சை - 2000/2001
கணனிச் செய்முறைப் பரீட்சை
Computer Practical Examination

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 27-02-2001 தொடக்கம் நடைபெறவுள்ளது. நேர அட்டவணை பற்றிய விபரங்களை முகாமைத்துவ வணிகபீட அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
22-02-2001
(கி/1520)

# சமாதானத்திற்கான யுத்தம் என்பது கொள்கை

# யுத்தத்திற்கான சமாதானம் நடைமுறை

பிரிட்டன் புலிகளைத்தடை செய்தால் சமாதான பேச்சுக்கள் குழம்பிவிடும் என்றுபிரிட்டன் பூச்சாண்டி காட்டியபடி பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. மறு தரப்பில் அது மறுக்கப்பட்டு வருகிறது. புலிகள் என்ன குழந்தைகளா? அவர்களுக்கு சண்டையும் பிடித்தபடி சமாதானமும் பேசமுடியும் என்று ஆரம்பித்து, பேச்சுக்கள் முன்னேற்றமடையும் கட்டத்தில் யுத்தநிறுத்தம் பற்றி பரிசீலிக்கப்படும் என்று இப்போ அரசாங்கம்அழுங்குபிடியாகமீண்டும் மீண்டும் கூறத் தொடங்கியுள்ளது. அதாவது சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாமல் போவதற்கு ஏற்ற நிலைமைகள் உள்நாட்டிலேயே உருவாகியுள்ளன. சமாதான பேச்சுக்களுக்கு முன்னோடியான ஒரு புரிந்துணர்வுஒப்பந்தமே ஒப்பமிடாமல் போகும் நிலைகூட உள்ளது. அதற்குள்ளேயே இழுபறிகள் உள்ளன. இந் நிலையில் யுத்தநிறுத்தம் பின்பு பேச்சுக்கள் முன்பு என்னும் நிலைப்பாட்டின் பின்னணியிலிருப்பது என்ன? சமாதானத்திற்கான முன்முயற்சிகளை சண்டைக்கு வலுவூட்டும் முயற்சிகளாக மற்ற முடியாததா என்ற அங்கலாய்ப்பு இருக்கின்றது.

## உள்மன விருப்பு அவசியம்

சமாதானப்பேச்சுக்கள் ஒரு சம்பிரதாயத்திற்காக செய்யப் படுவனவல்ல அடிமனத்திலிருந்து எழும் விருப்பினால் உந்தப்பட்டு, வெற்றி கிட்டும் வரை போராடிப் பெறப்படவேண்டியது சமாதானம். அதில் உள்மன விருப்பமுள்ளவர்களால் மட்டுமே அதனை அடைய முடியும். அரசு - புலிகள் சமாதானப் பேச்சுகளில் பங்குபற்றப் போபவர்கள் யார்? வானிலிருந்து திடீரெனத் தோன்றியவர்களுமல்ல. வாடகைக்கு அமர்த்தப்பட்ட சமரசப் பேச்சாளர்களுமல்ல. ஆனால், போரை நடத்துபவர்களுடன் உணர்வுகளால் ஒன்றுபட்டவர்களேயாவர் 18 ஆண்டுகள் நடந்த போரினால் பரமவைரிகளாகிவிட்டவர்கள் தான். சண்டையை திட்டமிடுபவர்களாகவும், நெறிப்படுத்துபவர்களாகவும், ஆலோசகர்களாகவும் உள்ளஇவர்கள்வெற்றிகளைக் கண்டு குதூகலிக்கவும், தோல்விகளைக் கண்டுபழிவாங்கவும் கூடிய மனநிலைகளை உடனுக்குடன் மாறிமாறிப் பெறும் இயல்புடைய மனிதர்கள், இவர்களை சமாதானப் பேச்சு மேசையை சுற்றி உடகாரவைத்து, யுத்தத்தையும் சமகாலத்தில் நடத்துவது என்றும் பிடிவாதம் எந்தளவுக்கு அந்தரங்க சுத்தியானது? யுத்த களத்தில் நிற்கும் படையினரின் பிரதம தளபதிகள் தான் ஜனாதிபதியும் வேலுப்பிள்ளை பிரபாகரனுமாவர். இறுதியில் சமாதான ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு நிறைவு செய்பவர்களும் இவர்களே. இந் நிலையில், புலிகள் மீதான தடை நீக்கப்படவுமில்லை, யுத்த நிறுத்தம் செய்யப்படவுமில்லை. போதாதற்கு ஒருதரப்பினர் இன்ரப்போல் பொலிஸாரினால் தேடப்படும் முத்திரை குத்தப்பட்டதுமான நிலையில், ஒஸ்லோ நகரிலோ அல்லது வேறு எங்கேனுமோ, யுத்த நிறுத்தம் பற்றி அரசு பரிசிலனைக்கு எடுக்க நினைக்கும்

**யூகி**

வரைக்கும் பேச்சுக்களை முன்னேற்றகரமாக நடத்திக்கொண்டே செல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள். ஒன்றில் கோமாளிகளாகவோ அன்றி பைத்தியக்காரர்களாகவோதான் இருப்பர்.

ஆனால் சமாதானத்திற்காக யுத்தம்புரியும் அரசு சமாதான ஏற்பாடுகள் வழியாகவே யுத்தம் நீடிப்புக்கான உபாயங்களையும் மேற்கொள்ள முடியும் என்ற நிலையே இருக்கின்றது.

சமாதானப் பேச்சுக்கள் சண்டை பிடிப்பவர்களின் அணிகலன்களாக பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்புக்களுமுண்டு. புலிகள் வலியுறுத்தும் பேச்சுக்களுக்கான உகந்த சூழ்நிலையென்பது, பேச்சுக்களுக்கு சார்பாக தத்தமது மனங்களை ஆயத்தம் செய்வதற்கு தலைமைக்கும், அத்தலைமையின் கீழுள்ள மக்களுக்கும் வழங்கப்படக்கூடிய அவகாசம் எனலாம். அதாவது, விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அப்போது நடைபெறக்கூடிய சமாதானப் பேச்சுக்களை மக்கள் எதிர்ப்பர். அது போன்ற சிங்கள, மக்களும் எதிர்ப்பர். மனச்செயற்பாடுகள், இயந்திரச் செயற்பாடுகளல்ல என்பதால், உண்பதற்கும், உறங்குவதற்கும்கூட உகந்த சூழலை தேடும் தேவை எமக்கு இருக்கிறது. பேச்சில் ஏற்படும் திருப்பம் சண்டையையும், சண்டையில் ஏற்படக்கூடிய ஒரு திருப்பம் பேச்சிலும் பாதிப்புக்களைஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாயிருக்கும்.

## கௌரவப் பிரச்சினை

பேச்சுக்களில் முன்னேற்ற மேற்படும் வரை தாம் யுத்தத்தை நடத்தப்போவதாக கூறும் அரசு, புலிகள் தென்னிலங்கையில் தாக்குதல்களை நிறுத்தவேண்டுமென்று கோரியுளளது. இது வேடிக்கையானது. அதாவது, அரசு விமானக்குண்டு வீச்சுக்களை நடத்தும். பல்குழல் பீரங்கிகளால் எறிகணைகளை வீசும். விமானச் சண்டையிலீடுபடாத புலிகள், உடல் சிதறி மரணிக்கும் பேர்களது உடல்களை அடுத்த குண்டு விழுவதற்கு முன் அகற்றும் பணிகளில் ஈடுபடலாம். அதே வேளை பேச்சுவார்த்தை மேசையிலிருந்து 'முன்னேற்றம்' ஏற்படும் வரை பேசினால் யுத்தநிறுத்தம் ஏற்படும். ஆனால் வடக்கு-கிழக்குக்கு வெளியே தாக்குதல்களை நிறுத்திவிட வேண்டும், என்பதை தவிர வேறு என்ன? இதே வேளை யுத்த நிறுத்தம் என்னும் சொற்களை உச்சரிப்பதிலேயே தேசத்துரோகம் இருப்பதுபோல அரச தரப்பினர் அச்சமடைவதும் தெரிகிறது. சகல விதமான வாகுறுதிகளையும், ஊக்குவிப்புக்களையும் கொடுத்து சிங்கள இளைஞர்களை சண்டைக்குத்தூண்டிவிட்டபின், யுத்த நிறுத்தம் என்று உச்சரிப்பதன் மூலம் அவர்களது வெறுப்பைச் சம்பாதிக்க விரும்பாத நிலையும் இருக்கிறது. இதனை விடவும், முக்கியமான கௌரவப் பிரச்சினையுமிருக்கின்றது. அதாவது சமாதானத்தின் எதிரிகள் என்று உலகின் முன் தம்மால் காண்பிக்கப்பட்டு வந்த புலிகளே யுத்தநிறுத்தத்தின் முன்னோடிகளாக செயற்படும் போதுதாம் பின்பற்றி செயற்படுபவர்களாக தம்மைக் காட்டிக்கொள்வதற்கு அரச தரப்பு விரும்பவில்லை. பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் உண்டு. இந்தப் பையன் நல்ல புள்ளிகள் பெற்றிருக்கின்றான். இவனுக்கு யுத்தநிறுத்தத்தை பரிசாகக் கொடுக்கலாம் என்ற பள்ளி ஆசிரியர் பாணியிலேயே விடயங்கள் எடை போடப்படுகின்றன.

இதே வேளை, புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு அத்தியாவசிய பொருட்கள் தாராளமாக அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் கால அட்டவணைக்குள் பேச்சுக்கள் முடித்துவைக்க வேண்டுமென்றும் சிறுபிள்ளைத்தனமாக கூறி புரிந்துணர்வு ஒப்பந்தத்தையே இழுபறிக்குள் மாட்டிவிடும் சதி நடைபெறுகிறது.

கால அட்டவணை என்பது ஒரு கட்டத்தில் வைத்து பேச்சுக்களை பேரத்திற்குள் மாட்டிவிடுவதற்கான இன்னுமொருபொறியாகும். செவிக்கினிய வார்த்தைகள் என்பதால் 'தனி ஈழம் தவிர்ந்த வேறு எந்தக் கோரிக்கையையும் பரிசீலிக்கத் தயார்' என்று ஒரு புறம் கூறினாலும் மறுபுறம் கால அட்டவணையை காட்டி மறு தரப்பினரை ஒரு பரீட்சை எழுதும் மாணவனின் மனநிலைக்கு தள்ளிவிடுவதன் மூலம், உளவியல் போருக்குள் மாட்டி, பேரத்தில் வெல்லலாம் எனவும் கருதுகிறார்கள்போலும். முடிவுக்கு எல்லை வகுக்காது நடத்தப்படக்கூடிய பேச்சுக்கள், தமிழர்கள் தமது பிரச்சினைகளின் ஆழ நீளத்தையெல்லாம் விரிவாக எடுத்தாராயும் தளமாக மாறி, பரம்பரை பரம்பரையாக தாம் செய்த அநீதிகளை அம்பலப்படுத்திவிடுவதுடன் தனிஈழம் நியாயமானதே என்ற மனப்பதிவை மக்களிடம்ஏற்படுத்தி விடலாம் என்று அச்சமடையவும் இடமுண்டு.

தடைகளே இல்லை இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் அத்தியாவசியப் பொருட்கள் தாராளமாக கிடைக்கின்றன. என்று ஒரு பிரச்சாரமும் செய்யப்படுகிறது. மின்சாரவாடையே இல்லாமல் மக்கள் வாழும் வன்னியில் தாராளமாக கிடைக்கும் அத்தியாவசியப் பொருளான மண்எண்ணெயை போத்தலொன்றை 200 ரூபாவுக்கு விற்க முடிகிறதே! தீப்பெட்டியொன்றை பத்து ரூபாவுக்கும், பனடோல் குளிசையொன்றை எட்டு ரூபாவுக்கும் விற்க முடிகிறதேயென்பது தான் நம்ப முடியாத விடயமாகவுள்ளது.

எது எப்படியிருப்பினும், நடைபெற்று வரும் விடயங்களை ஆராய்ந்து பார்த்தால், அரசு தரப்பில் போர்வெறி ஓங்கியிருப்பது தெரிகிறது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றவிடாது தடுக்கும் முயற்சிகள் பலிதமாகாவிட்டால், சமாதானப் பேச்சுக் கட்டங்களிலாவது எவ்விதத்திலும் குளப்பிவிடுவது என்ற பிடிவாதம் தொனிக்கிறது, 'கடச்ச சுபாவமுள்ளவரான' எரிக் சொல்ஹெய்மின் பணி தொடரட்டும்.

■ ■ ■

## இராசி பலன்

24-02-2001
(மாசி 12, சனி)
பிரதமை பி ப 3 50 வரை
சதயம் மு ப. 7 59 வரை
இராகுகாலம் 9 30- 11 00
சுபநேரம் 3 30- 5 00
அமிர்தம்.

**மேடம்**
கீர்த்தி, காரியம் கைகூடும், தனலாபம், நண்பர்கள் சந்திப்பு.

**இடபம்**
உத்தியோக மேன்மை, பயணம், சுபசெய்தி, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
பிரயாணம், வயிற்றுக் கோளாறு, பொருள் விரயம், பதட்டமடைதல்.

**கடகம்**
வியாதி, அமைதிக் குறைவு, எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
திடீர் பயணம், விருந்துபசாரம், சுவாரசியம், முயற்சி வெற்றி.

**கன்னி**
நோய் குணமடைதல், முயற்சி விருத்தி, பகைவரால் நன்மை, மனமகிழ்ச்சி.

**துலாம்**
சுபசெய்தி, காரிய தாமதம், மதிப்புக் குறைதல், பிரயாண தடங்கல்.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, மனப் பதட்டம், முயற்சி தாமதம், தூரத்துச் செய்தி.

**தனுசு**
இனிய சம்பவம், பிரயாணம், முயற்சி கைகூடும், தன வரவு.

**மகரம்**
கௌரவக் குறைவு, காரிய தாமதம், குடும்பக் கவலை, புதுத்திட்டம்.

**கும்பம்**
போசன சுகம், கௌரவம், காரியம் கைகூடும், ஆழ்ந்த சிந்தனை.

**மீனம்**
சயன சுகக் குறைவு, பிரயாணம், பணவிரயம், முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
வளவன்

## ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]

வள்ளுவர் அக்கடமியின் 6 ஆம் ஆண்டு விழாவும் பரிசுத்தினமும்அண்மையில் மன்றத் தலைவர் ம. கேதீஸ்வரி தலைமையில் நடைபெற்றது. [உ]

# குருநகர் மத்திய மருந்தகத்தில் பிரசவத் தாதி இல்லையென புகார்

[ஈச்சமோட்டை]

குருநகர் அரசினர் மத்திய மருந்தகத்தில் பிரசவதாதியின்மையால் அப்பகுதியிலுள்ள கர்ப்பிணித்தாய்மார் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குருநகர் பகுதி வாழ் மக்களின் உடனடி மருத்துவ தேவைகளை மேற்கொண்டு வரும் இவ் வைத்தியசாலையில் முன்னைய காலங்களில் பிரசவ விடுதி சீராக இயங்கியதால் மக்கள் பெரும் பயன்களைப் பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாகவே பிரசவ விடுதியை பராமரிக்கும் பிரசவத்தாதி இன்மையால் பிரசவத்தாய்மார்வேறுஇடங்களுக்கு செல்லவேண்டியுள்ளது.

இது தொடர்பாகசம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வைத்தியசாலை நிர்வாகம் எடுத்துக்கூறியும் எதுவிதமானசாதகமான பதிலும் கிடைக்கவில்லை, [உ-59]

# வானொலிக் கலைஞர் விருதுவழங்கி கௌரவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வைரவிழாவையிட்டு இலங்கை வானொலிக்கு அளப்பரிய சேவையாற்றிய கலைஞர்களைக் கௌரவித்து விருதுகள் வழங்கப்பட்டன.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் ராஜேஸ்வரி சண்முகம் எஸ், சரவணமுத்து[வானொலி மாமா] கலா சூரி ரி.பி. பிச்சையப்பா, வி ஏ. கபூர் சற்சொருபவதி ஆகியோருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (செ-9)

# சகல நாடுகளும் விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டும்

(கொழும்பு)

சகல நாடுகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யவேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணிக்கடசிசர்வதேச சமூகத்தை வலியுறுத்தியுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர் பியசேன திஸநாயக்கா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளைப்போல்; பிரிட்டன், ஐரோப்பா அடங்கலாக ஏனைய நாடுகளும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யவேண்டும்.

பயங்கரவாதத்தை தோற்கடித்து நாட்டைப் பாதுகாக்க அரசியல் பேதமின்றி சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (செ)

# தேவாலயம் திறப்பு

(ஈச்சமோட்டை)

புனருத்தாரணம் செய்யப்பெற்றுள்ள கரவெட்டி புனித அந்தோனியார்ஆலயத்தினை இன்று மு. ப 9 . 30 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைக்கவுள்ளார் (உ-59)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை முல்லைக் கடற்பரப்பில் கடற்படையினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலின்போது கடற்கரும்புலி ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

★ கடற்கரும்புலி கப்டன். கஸ்தூரி/பூங்கதிர் (நல்லநாதன் பவானி) பெரியமடு

★ கடற்புலிகளான 2ம். லெப். இளங்கீரா/படையரசி [இம்மனுவேல் பமிலா] யாழ். மாவட்டம்

★ கப்டன். சுபன் [ஶ்ரீதவராசா மோகனரூபன்] யாழ். மாவட்டம்

★ 2ம்லெப். போர்வாணன் [ஆசிர்வாதம் பிரதீப்ராஜ்] யாழ். மாவட்டம் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

கடந்த 12 ஆம் திகதி மணலாற்றுப் பகுதியில் படையினரின் வலிந்த தாக்குதலின் போது,

★ மேஜர். இளந்திரை [வைரமுத்து ரவிச்சந்திரன்[ மட்டக்களப்பு

★ மேஜர். நகுலேந்திரன்/அசோக் [தங்கராசா ஜேக்குமார்] மட்டக்களப்பு

ஆகிய போராளிகளும், இதே தினத்தில் மட்டக்களப்பில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில்,

★ மஞ்சு [கந்தவனம் உதயமாரி] மட்டக்களப்பு

என்ற போராளியும் கடந்த 14 ஆம் திகதி திருமலை மாவட்டம் சூரங்கல் பகுதியில் படையினரின் வலிந்த தாக்குதலின் போது

★ மேஜர். கலையாளன்/நிலவேந்தன் [காளீமுத்து சசிந்திரா சசிக்குமார்] திருமலைமாவட்டம்

★ கப். சுகந்தன் / எழில்வாணன்/அரசன் [மயில்வாகனம் சந்திரலிங்கம்] திருமலைமாவட்டம்

★ லெப். அன்பரசன் [ஜீவரட்ணம் விமலநாதம்] திருமலைமாவட்டம்

ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

# குடும்பப் பெண் வெட்டிக் கொலை

(கொழும்பு)

வயலில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குடும்பப்பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு பின்னர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கோரப் படுகொலைச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பொலநறுவை உடவெல காட்டுப்பகுதியில் இடம்பெற்றது.

வயலில் வேலை செய்துவிட்டு வீடுநோக்கி சென்று கொண்டிருந்த மேற்படி குடும்பப் பெண்ணை உடுவெல காட்டுப்பகுதியில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் அப்பெண் கொண்டு வந்த மண்வெட்டியாலேயே வெட்டிக் கொலை செய்துவிட்டு சம்பந்தப்பட்டோர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் பலியானவர் பொலனறுவை புதிய நகரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான பத்மாவதி (வயது 33) என்பவராவர்.

இப்பெண்ணின் படுகொலை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளைமுடுக்கி விட்டுள்ளனர். [உ-இ]

## புகையிரதம் தடம்புரண்டது

கொழும்பு கோட்டையிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதம் தடம் புரண்டதில், அதில் பயணம் செய்த பயணிகள் சிலர் காயத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். [செ]

# ஊர்காவற்றுறையில் இரு அவசரவேலைத்திட்டங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைநாரந்தனை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் கிராமத்தில் அவசரம் மேற்கொள்ளவேண்டிய திட்டங்களினை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரிடம் முன்வைத்துள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் த. மயூரநாதன் தெரிவித்தார்.

கடந்த 12 ஆம்திகதிகிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்இ.துரைச்சாமிஅவர்களின் தலைமையில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் அங்கத்தவர்களினால் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டத்தினையே உதவி அரசாங்க அதிபரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில்நாரந்தனையின் இரண்டு பிரதான வீதிகளையும்இணைக்கும் முருகன் வீதியில் ஆரம்பித்து சாத்திய வயல் வீதி ஊடாக செல்லப்பா வீதியில் முடிவடையும் பாதையானது கிராம மக்களின் போக்குவரத்திற்கு இன்றியமையாததாக இருப்பதாலும் நீண்ட காலமாக இவ்வீதி திருத்தப்படாது இருப்பதாலும் மிக அவசரமாக இவ்வீதி திருத்தப்பட வேண்டும். என்றும்,

நாரந்தனை பொது மயானத்தில் பிதிர்க் கடன்களை நிறை வேற்றுவதற்கு வசதியாக அவசரமாக கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட வேண்டும். என்ற இரண்டு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினையே கையளித்துள்ளனர். (உ-75)

# க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் பாட வினாக்கள் -03

## ஆசிரியர் : கே. சுகந்தன் B. Sc

### மாதிரி] அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**வினா I**

கீழ்க்காணும் இரு கிளைச் சாவி பின்வரும் விலங்கு வகைகளை பிரித்து இனங்காண்பதற்கென உருவாக்கப்பட்டது.

இருவால்வி, மண்புழு, அட்டை, நெமற்றோடு, இறால், நத்தை, நட்சத்திர மீன், நாடாப்புழு

1. அ) உடலின் உருவம் புழு போன்றது
   ஆ) உடலின் உருவம் புழு போன்றதல்ல
2. அ) உடலின் ஒரு முனையில் கீடகச் சென்னி உண்டு
   ஆ) கீடகச் சென்னி இல்லை
3. அ) உடலின் இரு முனைகளிலும் உறுஞ்சிகள் உண்டு
   ஆ) உடலில் அப்படியான உறிஞ்சிகள் இல்லை
4. அ) சிலிர் முட்களும் கட்டுச் சேணமும் உண்டு
   ஆ) சிலிர் முட்களும் கட்டுச் சேணமும் இல்லை
5. அ) உடலின் வெளிப் புறத்தில் தெளிவான துண்டுபடல் உண்டு
   ஆ) உடலின் வெளிப்புறத்தில் தெளிவான துண்டு படல் இல்லை
6. அ) ஆரைச் சமச்சீர் காணப்படும்
   ஆ) ————————————
7. அ) ———————— நத்தை
   ஆ) ———————— இருவால்வி

A) i) 1) ஆ) வுக்குப் பொருத்தமான இலக்கத்தை எழுதுக?
ii) 5) அ) வுக்குப் பொருந்தும் பிராணியைப் பெயரிடுக?
iii 6) ஆ) இல வரவேண்டிய மற்றைய கூற்றை எழுதுக?
iv) 7) அ) இல் வரவேண்டிய கூற்றைத் தருக?
v) 7) ஆ) இல் வரவேண்டிய கூற்றை எழுதுக?

B) மேலே காணப்படும் சாவியில் உபயோகிக்கப்பட்ட பின்வரும் பதங்களை விளக்குக
i) துண்டுபடல் ii) ஆரைச் சமச்சீர் iii) கட்டுச் சேணம்
iv) சிலிர் முள் v) கீடகச் சென்னி

C) i) கீடகச் சென்னியில் காணப்படும் முக்கிய கட்டமைப்பு ஒன்றைப் பெயரிடுக?
ii) அட்டையில் வாயுறிஞ்சியின் தொழிலைத் தருக?
iii) நட்சத்திர மீன்களின் இடப்பெயர்ச்சி அங்கங்கள் எவை?
vi) மேலே குறிப்பிட்ட பிராணிகளுள் மூடிய குருதித் தொகுதியுடைய ஒரு பிராணியைத் தருக?
v) மேலே கூறியவற்றுள் குருதித் தொகுதி அற்ற ஒரு பிராணியைக் குறிப்பிடுக?

D) கீழ்க்காணும் பிராணிகள் ஒவ்வொன்றும் சேரும் கணத்தையும் வகுப்பையும் தருக?

| பிராணி | கணம் | வகுப்பு |
|---|---|---|
| i) நாடாப் புழு | ——— | ——— |
| ii) மண் புழு | ——— | ——— |
| iii) நட்சத்திர மீன் | ——— | ——— |
| iv) இருவால்வி | ——— | ——— |
| v) இறால் | ——— | ——— |

**வினா II**

A (i) விலங்குகளை முதன் முதலில் பாகுபடுத்தும் முறையை அறிமுகப்படுத்திய விஞ்ஞானி யார்? ————————

(ii) விலங்குகளைப் பாகுபடுத்துவதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக?
(a) ————————
(b) ————————

(iii) விலங்குகளின் இயற்கைப் பாகுபாடு என்றால் என்ன?
————————
————————

(iv) விலங்குகளை இயற்கை முறையில் பாகுபடுத்துவதால் ஏற்படக் கூடிய ஒரு பிரச்சினையைத் தருக?
————————

(v) இரு சொற் பெயரீட்டு முறையில் பயன்படுத்தப்படும் இரண்டு கொள்கைகளைத் தருக?
————————
————————

B (1) உடற்குழி என்றால் என்ன? ————————

(2) உடற் குழிக்கும், போலி உடற்குழிக்கும் இடையிலான கட்டமைப்பு வேறுபாடுகள் என்ன? ————————
————————

(3) போலி உடற்குழியைக் கொண்ட கணம் எது? ————————

(4) இருபாலான முள்ளந்தண்டிலி விலங்குக் கணம் ஒன்று தருக?
————————

(5) Nematodes இன் பொருளாதார முக்கியத்துவம் யாது? ————————

C (1) கீழ்க்காணும் கணங்களின் குடம்பிகளைப் பெயரிடுக?

| கணம் | குடம்பி |
|---|---|
| (a) Coelenterata | ———————— |
| (b) Annelida | ———————— |

(2) Annelsds இல் காணப்படும் சுவாச நிறப் பொருட்களைத் தருக?
————————

(3) எச் சூழலில் வாழும் விலங்குகள் பிரதானமாக அமோனியாவை பிரதான நைதரசன் கழிவாக அகற்றும்? ———————— ————————

(4) சோடியான தொகுதி விற்களைக் கொண்ட விலங்கு வகுப்புக்கள் எவை?
———————— ————————

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

# 35 முஸ்லிம்களை விடுவிக்குமாறு புலிகளிடம்; சுபியான் கோரிக்கை

[கொழும்பு]

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முப்பத்தைந்து முஸ்லிம்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புலிகள் உறுப்பினர் சுதாவிடம் மௌலவிசுபியான்கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வமதக் குழுவினருடன் வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டியவுடன் அறிவிப்பதாகவும், முஸ்லிம்களில் சிலர் வன்னியில் குடும்ப வாழ்க்கை மேற்கொண்டுள்ளதாகவும் சுதா, சுபியானிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு முஸ்லிம்கள்மீண்டும் குடியேற புலிகள் பகிரங்கமான அழைப்பை விடுக்க வேண்டும் என்ற சுபியானின் கோரிக்கைக்கு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்புடன் பேசிய பின்னரே இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும்,

இது குறித்து தாங்கள் பகிரங்கமாக அறிவிப்பதாகவும் சுதா தெரிவித்துள்ளார். (செ)

# வீதிகளில் குப்பை போக்குவரத்தில் சிரமம்

[ஈச்சமோட்டை]

யாழ்நகரில் மக்கள் அதிகளவில் பாவிக்கும் வீதியோரங்களில் குப்பைகள் குவிக்கப்படுவதனால் போக்குவரத்துக்கு சிரமம் ஏற்படுகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் வீதி, அச்சக வீதி போன்ற இடங்களில் அப்பகுதிகளை அண்டியபகுதியிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை ஒன்றாக குவித்து விடுவதால் அவை அகற்றப்படும் சில நாட்கள் வரை போக்குவரத்துக்கு சிக்கல் ஏற்படுவதோடு, துர்நாற்றமும் நகரில் அசிங்கமும் ஏற்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை கருத்திற் கொண்டு குப்பை கூழங்களை உரிய இடங்களுக்கு உடன் அகற்றுவதன் மூலம் போக்குவரத்து இடைஞ்சல்களைத் தவிர்ப்பதோடு நகரின் அழகையும் கெடாது பாதுகாத்துக் கொள்ளலாம் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-59]

### விசேட கொடுப்பனவில் பாரபட்சம்

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட யாழ். மருத்துவர்கள் முடிவு

(யாழ்ப்பாணம்)

அரசின் நியாயமற்ற பாரபட்சமான நடவடிக்கைகளை எதிர்த்தும், நியாயமாக நடக்குமாறு கோரியும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் உட்பட பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக ஆராயப்படுவதுடன், விரைவில் அரசு எமது கோரிக்கைக்கு சாதகமான பதில் தராவிட்டால் எம் நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டியநிலை ஏற்படும்.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் வைத்திய அதிகாரிகளுக்கு விசேட கொடுப்பனவு வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதை கண்டித்து அரச மருத்துவர் யாழ் கிளை வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளுள் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களை சொந்த இடமாகக் கொண்டுள்ள ஒரு பகுதியினருக்கு மட்டும் சுகாதார அமைச்சு விசேட மேலதிக கொடுப்பனவை வழங்கியுள்ளது.

இதற்காக இங்கு கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளின் தேசிய அடையாள அட்டைகளில் உள்ள வதிவிட முகவரி பரிசீலிக்கப்பட்டு வெளிமாகாண முகவரி உடையவர்களை மட்டும் கொடுப்பனவுக்குத் தகுதியானவர்களாக அமைச்சு தெரிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கை சொந்த இடமாகக் கொண்ட வைத்திய அதிகாரிகளில் பலரும் வெளியேறிவிட்ட நிலையில் இங்கு தங்கி நின்று சகல போர்க்கால நெருக்கடிகளையும் சுகாதாரசேவையில் நிலவும் குறைபாடுகளால் ஏற்படும் சுமைகளையும் ஏற்று கடமையாற்றிக் கொண்டிருப்பவர்கள் பெரும்பான்மையானோர் அரசின் இவ்வகை பாரபட்சத்தினால் வடக்கு - கிழக்கில் பிறந்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இங்கு கடமையாற்றும் வைத்தியர்கள் அதற்காக மேலதிக கொடுப்பனவுகள் தேவை என முன்னர் கோரியதில்லை.

ஆனால் திடீரென அரசு இங்கு கடமையாற்றும் வெளிமாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் விசேட கொடுப்பனவு ஒன்றையும் மேலும் பல சலுகைகளையும் அறிவித்தது.

இவ்வகை கொடுப்பனவுகளும் சலுகைகளையும் அரசு வழங்குவதாயின் பாரபட்சம் ஏதுமின்றி அனைத்து வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஒரு வருட பரிசீலனையின் பின் அரசு மேற்படி கொடுப்பனவையும் சலுகைகளையும் பாரபட்சமானமுறையிலேயே நடைமுறைப் படுத்தியுள்ளது. பாரபட்சம்வேண்டாம் என்ற கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## மலையகத்தொ. சங்கங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும்

(கொழும்பு)

மலையகத்தைச் சேர்ந்த 29 தொழிற் சங்கங்கள் (மலையகத்தேசிய முன்னணி) இம்மாதம் 28ஆம் திகதி கொழும்பு கோட்டைப் பகுதியில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளன.

மலையகத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரியும், பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையம் மீதான சம்பவம் குறித்து விசாரிக்க வெளிநாட்டுக்குழு நியமிக்கப்படுவதை வலியுறுத்தியும், மலையக மக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்படுதல் ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுமென, மனோ கணேசன், எம். எஸ் செல்லச்சாமி, சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(வ)

## மாட்டுத் திருட்டு முயற்சி முறியடிப்பு

(கோப்பாய்)

நள்ளிரவு வேளையில் மாடு திருட முயன்றவர்கள் வீட்டார் விழித்தெழவே வீட்டுப் படலையில் மாட்டை கைவிட்டு தப்பியோடிய சம்பவம் கோப்பாய்மத்தியில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

வீட்டுக் காணிக்குள் சென்ற திருடர் கட்டியிருந்த மாட்டை இழுத்துச் சென்றபோது ஏற்பட்ட சத்தம் காரணமாக வீட்டார் சத்தமிடவே திருடர்கள் வேலி பாய்ந்து தப்பியோடி விட்டதாக கூறப்படுகிறது. [உ-79]

## தும்படிக்கும் இயந்திரத்தில் கை சிக்கியதில் காயம்

(யாழ்ப்பாணம்)

தும்பு அடிக்கும் இயந்திரத்திற்குள் கைசிக்கியதால் படுகாயமுற்ற ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலை அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன் அனுபவமில்லாத இந்நபர் இணுவிலிலுள்ள தொழிற்சாலையொன்றில் தும்படிக்கும் இயந்திரத்தில் மட்டையை திணிக்கும் போதே கையில் பாரியகாம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வேலும் மயிலும் [வயது42) உரும்பிராய்] என்பவரே காயத்திற்குள்ளாகி யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-12]

## யாழ்-பரு. பேருந்து சேவை அதிகாலையில் ஆரம்பிக்க பொதுமக்கள் விருப்பம்

(செம்பியன்பற்று)

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு புறப்படும் முதலாவது பேருந்து சேவையினை அதிகாலை வேளையில் ஆரம்பிக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முதலாவதுசேவை காலை 6. 30 மணிக்கு ஆரம்பமாவதால் 8 மணியளவிலேயே பருத்தித்துறையைச் சென்றடைகிறது.

இதனால் வேலைத்தலங்களிற்குச்செல்வோர் பல சிரமங்களையும் தாமதங்களையும் எதிர் நோக்கவேண்டியுள்ளது.

எனினும், பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய முதலாவதுபேருந்து சேவை அதிகாலை 5. 30 மணிக்கேஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

(உ-42)

## சமுர்த்தி செயலணி

(ஆவரங்கால்)

கோப்பாய் வடக்கு (ஜே/262) கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணி அமைப்புக்கூட்டம் இன்று பி ப 3.00 மணிக்கு யாழ். கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தில் வலயம் 1 இன் சமுர்த்தி முகாமையாளர் செல்வி நீலாயினி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-)

## கண்ணாடி கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்]

கொட்டடிசீனிவாசகம் வீதியில் மூக்குக் கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (உ-57)

## விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கலைமகள் விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருந்த வாலிபன் கீழேவிழுந்து உட்காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நவரத்தினம் நந்தகுமார் (வயது- 22) அரியாலை ஏ. வி. வீதி என்பவரே காயமடைந்தவராவர். (உ-12)

## நிர்வாக சபை கூட்டம்

(இணுவில்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தென்மராட்சிக் கிளை நிர்வாக சபைக் கூட்டம் இன்றுமு. ப. 10மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இத் தெரிவில் அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார்.

(உ-49)

### இன்று ஒரு தகவல்

## யாருக்கு யார் உறவு?

முன்னொரு காலத்தில் சித்திர கேது என்ற அரசன் இருந்தான். அவனுடைய இராணிகளைக் கணக்கிட முடியாது. ஆனால் அவனுக்குப் புத்திர பாக்கியமே ஏற்படவில்லை. ஒரு சமயம் அவனுடைய சபைக்கு மகரிஷி அங்கிரஸ் வந்து சேர்ந்தார். அவர் புத்திர சோகத்தால் வாடிய அரசனைப் பார்த்து தாம் ஒரு வேள்வி செய்வதாகவும் அந்த வேள்வியின் பிரசாதத்தை மூத்த இராணிக்குக் கொடுப்பதாகவும், அவளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் சொன்னார். கூடவே அவர் ஓர் எச்சரிக்கையும் செய்தார். அரசனுடைய சுகத்திற்கும் துக்கத்திற்கும் அவனுக்குப் பிறக்கும் மகனே காரணமாக இருப்பான் என்றும் சொன்னார்.

மகரிஷி வேள்வியை முடித்துப் பிரசாதத்தைமூத்த இராணிக்குக் கொடுக்க அவள் கர்ப்பவதியாகி விரைவில் ஓர் அழகிய மகனை ஈன்றெடுத்தாள் மகன்பிறந்தசந்தோஷத்தில் அரசன் சித்திர கேது மற்ற எல்லா இராணிகளையும் மறந்து விட்டு, எப்பொழுது பார்த்தாலும்மூத்த இராணியின் மாளிகையிலேயே இருக்கஆரம்பித்தான். இது காரணமாகக் கோபங்கொண்ட மற்ற இராணிகளுக்கு அந்தக் குழந்தையின் மீது கோபம் ஏற்பட்டதுஇந்தக் குழந்தையினால் தானே அரசர் நம்மைப் புறக்கணிக்கிறார் ஆகவே இந்தக் குழந்தையை விஷம் வைத்துக் கொன்று விட்டால் என்ன? என்று அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆலோசனை செய்தார்கள் ஒரு நாள் அப்படியே செய்தும் விட்டார்கள். குழந்தை இறந்தது.

குழந்தை இறந்த செய்தி தெரிந்ததும் மூத்த இராணிக்கும் அரசன் சித்திர கேதுவுக்கும் ஏற்பட்ட வருத்தம் சொல்ல முடியாது பைத்தியம் பிடித்தவன் போல் அரசன் குழந்தையின் உடலையே பார்த்தபடிநின்று கொண்டிருந்தான்.

அப்பொழுது மகரிஷி அங்கிரசும் நாரத மகரிஷியும் அங்கே பிரசன்னமானார்கள். துக்கத்தில் ஆழ்ந்திருந்த அரசனைப் பார்த்து அங்கிரஸ் அரசனே! நீ கடவுள் பக்தி கொண்டவன். ஆகவே. கடவுளை அடையும் வழியை உனக்குச் சொல்லலாமென்று தான் நான் முதல் தடவை உன் அரசசபைக்கு வந்தேன். ஆனால் நீயோ பிள்ளை வேண்டும் என்ற பைத்தியத்தில் இருந்தாய். ஆகவே நான் உனக்குப் புத்திரனை அளித்தேன் அது காரணமாக நீ இப்போது துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாய். உலகமே இந்த மாதிரிதான் துன்பத்தில்ஆழ்ந்திருக்கிறது. என்று சொன்னார். ஆனால் சோகத்திலாழ்ந்திருந்த சித்திரகேதுவினால் அவரது வார்த்தைகளின் உட் கருத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. அப்போது நாரதர் ஒரு காரியம் செய்தார். தம் தவவலிமையினால் குழந்தையின் உடலிலிருந்து பிரிந்து சென்று விட்ட ஜீவனைத் திரும்ப வரவழைத்தார். அந்த ஜீவனைப் பார்த்துஅவர் ஓ ஜீவாத்மா! இதோ பார்! உன்னுடைய அன்னையும், பிதாவும மிக்க துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். மீண்டும் இந்தச் சரீரத்தில் புகுந்து அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இந்த இராஜபோகத்தையும் அனுபவி' என்றார்.

உடனேஜீவாத்மா அவரைப் பார்த்து 'தேவரிஷி! இவர்கள் எப்படி எனக்கு அன்னையும், பிதாவும் ஆவர்? ஜீவனுக்கு, அன்னையுமகிடையாது பிதாவும் கிடையாது, எத்தனையோ ஜன்மங்களில்நான் இவர்களுக்குப் பிதாவாக இருந்திருக்கிறேன், பந்துவாக இருந்திருக்கிறேன். அதே மாதிரி இவர்களும் எனக்குப் பிதாவாகவும், பந்துவாகவும் இருந்திருக்கிறார்கள. சரீரசம்பந்தம் இருக்கும் வரையில் தான் இந்த உறவெல்லாம். அதற்குப் பிறகு அவரவர் கர்மத்திற்கு ஏற்றாற் போல் செல்ல வேண்டியது தான். என்று சொல்லி ஜீவன் சென்று விட்டது. இதைக் கேட்டதும் சித்திர கேதுவுக்கு ஞானம் பிறந்தது. நாரதமகரிஷி செய்த உபதேசத்தைப் பின் பற்றி அவன் சீக்கிரமே பகவானுடைய பாதார விந்தங்களை அடைந்தான்.

நன்றி

தெய்வீகக்கதைகள்

## இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் போட்டி ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமாகியது.

இரண்டு அணிகளுக்கிடையில் நடைபெறும் ஏழாவது டெஸ்ட் போட்டியான இப்போட்டியில் இலங்கையணி வெல்வதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதாக கிரிக்கெட் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புலிகளை பிரிட்டன் தடை செய்யாவிடின் இங்கிலாந்திற்கும்-இலங்கைக்கும் இடையிலான இப் போட்டியை குழப்பப் போவதாக சிஹல உறுமய எச்சரிக்கை விடுத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-9)

## தென்மராட்சி நோக்கி ஆட்லறி ஷெல் தாக்கு

(வடமராட்சிகிழக்கு)

நேற்று முன்தினம்வியாழக்கிழமை அதிகாலைஐந்துமணியில் இருந்து ஐந்து முப்பது மணிவரை தென்மராட்சிப் பகுதியில் உள்ள படையினரின் ஆட்லறி தளங்களில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி எனக் கருதப்படும் இடங்களை இலக்கு வைத்து ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பளை, புலோப்பளைப் பகுதிகளை இலக்குவைத்தே ஷெல்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இச்ஷெல் தாக்குதல்களை அடுத்து 'வடமராட்சிகிழக்கு தென்மராட்சிப் பகுதிகளை வேவு விமானம் ஒன்று நோட்டமிட்டுக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிகிறது.

(உ-43)

## சேவையிலிருந்து இடை நிறுத்தம்

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தான் இராணுவப் பிரிகேடியர் ஜவர் இக்பால் மலிக் சேவையிலிருந்து இடை நிறுத்கப்பட்டுள்ளார்.

1999ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம் பெற்ற இராணுவ சதிப்புரட்சி பற்றிய தகவல்களை, முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப்பிற்கு தெரிவித்த குற்றத்திற்காகவே இவர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். (செ)

# மொஸாம்பிக்கில் வெள்ள அனர்த்தம்

# வீடு வாசல்களை இழந்து மக்கள் பரிதவிப்பு

## உயிரிழப்போர் தொகையும் அதிகரிப்பு

(மபுட்டோ)

மொஸாம்பிக் நாட்டில் வெள்ளப்பெருக்கு அனர்த்தம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவ் வெள்ளப் பெருக்கு காரணமாக, 41 பேர் இது வரை உயிரிழந்துள்ளதுடன், பல்லாயிரக் கணக்கானோர் தமது வீடுவாசல்களை இழந்துள்ளனர்.

வெள்ள அனர்த்தங்களினால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு உதவியளிக்க முன் வருமாறு மொஸாம்பிக் அரசு பல்வேறு நாடுகளையும் உதவி கோரியிருப்பதுடன், 30 மில்லியன் டொலர் உதவி உடனடியாகத் தேவையெனவும் அவசர அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, வெள்ளத்துள் சிக்குண்டு மீள முடியாது தவிக்கும் மக்களை மீட்டுவர அரச உலங்கு வானூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் ஏற்பட்ட இதே மாதிரியானதொரு வெள்ளப்பெருக்கினால் 700 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தமிழக மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்கவும்

## பழ. நெடுமாறன்

[புதுடில்லி]

தமிழக மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்க வேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

அண்மைக் காலங்களில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் சுட்டுக் கொல்லப்படுவது அதிகரித்துள்ளது.

இதனைத் தடுக்க மத்திய அரசால் முடியாவிட்டால் மீனவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்காக துப்பாக்கி வழங்க வேண்டும்.

கடந்த பதினைந்து வருடங்களில் முந்நூறு தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

இவ்வாறு மீனவர் சமுதாயத் தலைவர் சிங்காரவேலவனின் 140 ஆவது பிறந்த நாள் வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். (செ)

# கொங்கோ சிறுவர்கள் குடும்பத்தாரிடம் சேர்ப்பு

(கம்பாலா)

இராணுவப் பயிற்சி பெற்ற 160 கொங்கோ சிறுவர்களை உகண்டா அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பிடம் ஒப்படைத்துள்ளது.

ஒன்பது வயது தொடக்கம் பதினேழு வயது வரையிலான இச் சிறுவர்கள் அனைவரும் அவர்களது குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சிறுவர்களைபெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் சிறுவர் முகாம்களில் நன்னடத்தை பயிற்சியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ)

# ரஷ்யாவிற்கு உளவறிந்த அமெரிக்கர் கைது

(வாஷிங்டன்)

ரஷ்யாவிற்கு உளவு அறிந்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் சிரேஷ்ட அமெரிக்க எப்.பி.ஐ முகவர் ஒருவரை கடந்த ஞாயிறன்று அமெரிக்க பொலிஸ் கைது செய்துள்ளது.

எப்.பி.ஐ முகவர் கைது செய்யப்பட்டமை ரஷ்ய-அமெரிக்க கெடுபிடி இன்னமும் சுமூக நிலைக்கு வரவில்லை என்பதையே காட்டுகிறது என நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா மேற்குநாடுகளுக்கு மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரைஸ் இச் சம்பவம் குறித்து கருத்துவெளியிட்டுள்ளார்.

அதேவேளை, அமெரிக்க ரஷ்ய வெளி நாட்டமைச்சர்கள் எகிப்தில் சந்திக்கும் முயற்சி மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ-9)

## தி.மு.க. வுடன் கூட்டு

# இறுதி முடிவெடுப்பதில் த.மா.கா. தாமதம்

(சென்னை)

தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க வருமாறு தி.மு.காவுக்குகருணாநிதி அழைப்பு விடுத்த போது இது தொடர்பாக இன்னும் முடிவெடுக்கவில்லையென த.மா.கா. தலைவர் மூப்பனார் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தி.மு. கவுடன் கூட்டணி அமைக்க த.மா.கா. தரப்பில் அதிகாரபூர்வமாக எந்தபேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

கூட்டணி அமைப்பது தொடர்பாக த.மா.கா எப்போது முடிவெடுக்கும் என்ற நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த மூப்பனார் சோனியா காந்தியின் தூதர்களுடன் தற்போது பேச்சு நடத்தியுள்ளேன் அவர்கள் ஜெலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி தகவல்தந்தபின்னர்எதனுடன் த.மா.கா. கூட்டணி அமைக்கும் என்பது பற்றிய இறுதி முடிவை நான் வெளியிடுவேன் என்று தெரிவித்துள்ளார். உ9

## கார்க்குண்டு

ஸ்பெயின் வடபாக நகரத்தில் இடம்பெற்றகார்க்குண்டு வெடிப்பில் இருவர் கொல்லப்பட்டு நால்வர் காயமடைந்துள்ளனர். (உ-8)

## செய்திப்பரல்

★ அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பதவியேற்று ஒரு மாத கால நிறைவை முன்னிட்டு சென். லூஸியிலுள்ள மோஸீன் ஆரம்ப பாடசாலை மாணவர்க்கு இனிப்புகள் வழங்கினார்.

★ எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பரிசுத்த தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பரை கடந்த செவ்வாயன்று வத்திக்கானில் சந்தித்தார்.

★ அவுஸ்திரேலியாவில் குடியேற முயன்றவர்களின் எண்ணிக்கை சுறாமீனின் ஆபத்து, கடுமையான சட்டம் என்பவற்றையடுத்துகுறைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ நிப்பன்தாதி தொலைபேசிக்கூட்டுத்தாபனத்தில் இருந்து வருமாண்டு 8ஆயிரத்து 500 ஊழியர்கள் ஓய்வு பெறப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

★ லண்டனிலிருந்து சென்பிரான்ஸிஸ்கோ வந்திறங்கிய விமானத்தின சக்கரத்தில் ஒரு சடலம் சிக்கி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (செ-9)

# பிரிட்டன்-அமெரிக்க விமானங்கள் மீது ஈராக் தாக்குதல்

(வாஷிங்டன்)

கடந்த வியாழனன்று தெற்கு வானத்தடைப்பிரதேசத்தில் பறந்த அமெரிக்க பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் மீது ஈராக் தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

மேற்படி தினத்தன்று பறந்த அமெரிக்க-பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக்கியர் ஏவுகணை மற்றும் விமானப் பீரங்கிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியபோதும் தமது ஜெட் விமானங்கள் பதிலடி கொடுக்கவில்லையென அமெரிக்க கடற்படை அதிகாரி அட்மிரல் ரெய்க் குயிக்லி தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்க-பிரிட்டிஷ் விமானங்கள் அண்மையில் தாக்குதல் நடத்தியதை அடுத்து அதற்கு பதிலடி கொடுத்தே தீருவோம் என்று ஈராக் எச்சரித்திருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. [உ-9]

# தேவகவுடா மனைவி மீது அஸிற் தாக்குதல்

[புதுடில்லி]

முன்னாள் இந்தியப் பிரதமர் தேவகவுடாவின் மனைவி அவரது உறவினரால் அஸிற் தாக்குதலுக்கு உட்படுத் தப்பட்டுள்ளார்.

59 வயதான செல்லம்மா கவுடா மீது மேற்கொள்ளப்பட்ட அஸிற் தாக்குதலால் இவரது உடலின் பல பகுதிகள் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளது.

தேவகவுடாவிற்கும் அவரதுசகோதரருக்கும் இடையே நிலவிய அரசியல் தகராறே இவ் அஸிற் தாக்குதலுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. [செ]

# மகாராணியின் கடமைகள் இளவரசரிடம் ஒப்படைப்பு

[லண்டன்]

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் மூப்படைந்து வரும் காரணத்தால் களைப்படைந்து விட்டதாகவும் அவரின் கடமைகளை இளவரசர் சார்ள்ஸ் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அரச வரலாற்றை எழுதிவரும் பிலிப் ஸீக்லர் கூறியுள்ளார்.

வரும் ஏப்ரல் மாதம் 75 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாட இருக்கும் பிரிட்டிஷ் மகாராணி ஓய்வு பெறும் வயதை எப்போதோ கடந்து விட்டார்.

அவர் வருடம் ஒன்றுக்கு 500ச்கு மேற்பட்ட பொது நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார்.

அத்துடன் நாட்டின் தலைவி என்ற முறையில் அரசாங்கத்தின் தேவைகளையும் அவர் கவனிக்க வேண்டியுள்ளது.

எனவே அவரது மூத்த புதல்வர் சார்ள்ஸ் அவரது பொறுப்புகளில் பங்கேற்க வேண்டும் என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். [ ]

# புதுடில்லி-இஸ்லாமாபாத் சமரசமாக வேண்டும்

(வாஷிங்டன்)

புதுடில்லியும் இஸ்லாமாபாத்தும் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளார் ஜெனரல் பர்வேஸ் முஷாரப்பிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே புஷ் இவ்வாறு கேட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் சமாதானமாக இருக்கும் பட்சத்திலேயே தெற்காசியாவில் அமைதியும், ஸ்திரத்தன்மையும்நிலவும்

என புஷ் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (செ)

## உலக தரிசனம்

## சுட்டுக் கொலை

பாகிஸ்தானில் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் உட்பட மூன்று முஸ்லிம் சமுகத்தினர் துப்பாக்கி நபர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். [செ]

# புதிய தமிழகம் கட்சி தி.மு.கவுடன் கூட்டிணையும் கருணாநிதிநம்பிக்கை

(சென்னை)

தி.மு.க கூட்டணியில் புதிய தமிழகம் கட்சி இடம் பெறும் என்று தான் நம்புவதாக தி.மு.க தலைவர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

கடந்த வாரம் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமியும் முதல்வர் மு. கருணாநிதியும் சந்திப்பொன்றை நிகழ்த்தி கூட்டணி ஏற்படுத்துவது தொடர்பாக கலந்தாலோசித்த பின்னரே கருணாநிதி இந்நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து பா.மா.க விலகியதை அடுத்து த.மா.க உட்பட பல கட்சிகளை தன்பக்கம் ஈர்ப்பதற்கு கருணாநிதி கடும் முயற்சி செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

# குற்றம் சாட்ட தடை

பிலிப்பைன்ஸில் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி எஸ்ராடா மீது 30நாட்களுக்குள்த்தகைய குற்றச் சாட்டும் சுமத்தக் கூடாது என பிலிப்பைன்ஸ் சுப்ரீம் நீதிமன்றம் குறைகேள் அதிகாரிகளுக்கு தடை விதித்துள்ளது. (உ-9)

வான்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

**குறள்**



# வலம்புரி



## கூனி பிறந்த மண்ணல்லோ

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் முட்டுக்கட்டையாக இருப்பது இந்தியா என்பது இப்போது வெளிப்படையாகிவிட்டது. தன்னை மீறி எவரும் சமாதானம் செய்ய முடியாது என்ற உள்ளுணர்வோடு - இந்தியாவின் போக்கு அமைந்துள்ளது. நோர்வேயின் சமாதான முயற்சியை இந்தியா வரவேற்பதுபோல் காட்டிக் கொண்டாலும், அது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் வஞ்சகம் என்பதை உலகு உணர்ந்துவிட்டது.

கடந்த இருபது வருடங்களாக இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்கள் அனைத்தையும் அறிந்து கொண்டநாடு இந்தியா. அதிலும்இலங்கையில் உயிருக்கு உத்தரவாதமின்றி ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கடல் வழியாக தமிழகத்திற்குள் நுழைந்ததும், அங்கு அவர்கள் பெரும் கஸ்ரத்தை அனுபவிப்பதையும் இந்தியா நேரில் கண்டுள்ளது.

அப்படியிருந்தும் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதைத் தடுப்பதில் இந்தியா முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

நோர்வேயின் சமாதான முயற்சியில் இந்தியா வெறுப்பும் - சீற்றமும் கொண்டுள்ளதென்பதை ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தியப் பயணம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தருமனும், கண்ணகியும், அண்ணல் காந்தியும் பிறந்த இந்திய மண்ணில் தானே கூனியும் பிறந்தாள். அந்த அழுக்காறு கொண்ட கூனியால் இராமனின் முடி சூட்டு வைபவம் தடைப்பட்டது. அதே போன்று இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் இன யுத்தத்திற்கு முடிவைக் கட்ட நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு கூனியாக இந்தியா இருக்கிறது. எப்படியாவது விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென சங்கணம் கட்டியிருக்கும் இந்தியாவின் பொறுப்பற்ற செயலால் தமிழ் மக்களின் பிரச்சினை சமாதானமாகத் தீர்க்கப்படுவது தடைப்படுமோ என அஞ்சத் தோன்றுகிறது.

### திறனாய்வுக்களம்

# பல்கலை 'முதுசம்' நிகழ்வில் மக்களைக் கவர்ந்த

# சாந்தினியின் நடன, நாடகப் படைப்புகள்

உலகிலுள்ள ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் பலஅடையாளங்களுண்டு அவ்வகையில் நமது கலாசாரத்தினை அதற்கேயுரிய அடையாளங்களோடு பேணி வளர்க்கவும் அத்துடன் வளர்ந்த மூத்த கலைஞர்களினது படைப்புக்களையும் வளர்ந்து வருகின்ற படைப்பாளரின் ஆக்கங்களையும் அறிமுகப்படுத்தி அதனூடாக கலைப்பகிர் வினையும் கலை இயக்குகின்ற சூழலை உருவாக்கவும், இத்தகைய கலை வெளிப்பாடுகளை வரலாற்று ரீதியாக ஆவணப் படுத்தும் முயற்சியாகவும், யாழ். பல்கலைக்கழக கலை வட்டம் முதுசம் என்ற நிகழ்வுத் தொடரை வழங்கி வருகிறது. அந்த வகையில் இம் மாதம் மூன்றாம் திகதி சனிக்கிழமையன்று மாலை மூன்று மணியளவிலே நடன அர்ப்பணம் என்ற நிகழ்வும் சாபவிமோசனம் என்ற நிருத்ய நாடகமும் முதுசம் நிகழ்ச்சித் தொடரின் இரண்டாவது நிகழ்வாக இடம் பெற்றது. இந் நடன நிகழ்ச்சிகள் 'கலாபவனம்' என்ற நடன நிறுவனத்தை நடத்து பவரும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி நடன விரிவுரையாளருமான திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களால் தயாரித்து வழங்கப் பட்டது.

### தரமான நடனம்

ஆரம்ப நிகழ்வான நடன அர்ப்பணத்தில் புஷ்பாஞ்ஜலி, ஷண்முக கௌத்துவம், நடேசஸ்துதி, பதம் மற்றும் பந்தாடும் நிகழ்வுகள் ஆடல் அளிக்கைகளாக வெளிப் படுத்தப்பட்டன. கௌத்துவம், நடேசஸ்துதியான 'ஸம்போ...' ஆகியவற்றை ஆடிய ஆண்கள் மூவரினது நடனமும் அவர்களுக்கேயுரிய கம்பீரத்தோடு ஆங்காங்கே நளினமுமிணைந்து விறுவிறுப் பாக வெளிப்பட்டது. இவர்களிடையே காணப்பட்ட லய இணைவு ஆடலுக்கு மெருகூட்டியது மலையாளப் பெண்ணின் பந்தாட்டமானது ஒயிலான அசைவு நிலைகள் சீரானபாத வேலைகள மற்றும் எழிலான முக பாவங்களோடு நிகழ்த்தப் பட்டது. நல்ல கலைப் பாரம்பரியப் பின்னணியும் அடித் தளமும் இருப்பதால் நடனமும் தரமாக இருந்ததில் வியப்பில்லை.

### பதமும், ஸஞ்ஜாரி பாவமும்

'புன்னை மர நிழலில்...' என ஆரம்பிக்கின்ற பதமானது பரமாத்மாவான கண்ணன் குழலிசையில் மயங்கிய ஜீவாத்மாக்களின் இயல்புகளை நமக்கு நன்கு படம் பிடித்துக் காட்டியது. பரமாத்மாவான ஆயன் குழல் நாதத்தின் இனிமையில் மனிதர் மட்டுமன்றி ஐந்தறிவு ஜீவன்களும் எவ்வாறு மெய் மறந்துறங்குகின்றன என்பதனை ஆடியவர் வெளிப் படுத்தினார். ஜீவாத்மாக்களின் இயல்பைக் காட்டி இறுதியில் கண்ணன் காத்திருக்கிறான். அவனிடம் செல்வாயென்று தோழி ராதையைக் கொஞ்சுவதாக முடிகிற இப்பதம் அழகான ஸஞ்ஜாரி பாவங்களோடு நிகழ்த்தப்பட்டது. மரத்தின் கீழிருந்து கண்ணன் குழல் இசைப்பது, உயிரினங்கள் அவனோடு இழைவது, இறுதியில் தோழி கெஞ்சுவது போன்றவை இயல்பாக இயற்கையாகச் சித்தரிக்கப் பட்டிருந்தன.

### அகலிகையின்சாபவிமோசனம்

இரண்டாவது நிகழ்ச்சியாக 'சாப விமோசனம்' என்ற நிருத்திய நாடகம் இடம்பெற்றது. இது வைஷ்ணவ காவியமான இராமாயணத்தில் வரும் அகலிகையின் கதை பற்றியசித்தரிப்பாகும்; தேவமாதின் நடனத்தில் மூழ்கியிருந்த இந்திரன் நாரதர் வருகையை அலக்ஷ்யப் படுத்துகிறான்; அப்போது நாரதர் கௌதமன் துணைவியான அகலிகையைப் பலவாறு புகழ்ந்து பூலோகத்திலும் பேரழகினைக் காணலாமென்று அவனது இந்திரியங்

## ஸஞ்ஜாரி

களைத் தூண்ட அவன் பூமிக்கு வந்து கௌதமராய் வேடமிட்டு அகல்யாவோடு கூடி கௌதமரின் சாபத்திற்கு ஆளாகின்றான். அகல்யாவிற்கும் 'கல்லாவாய்' என்ற சாபம் இடப்படுகிறது. 'நெஞ்சினாற் பிழைப்பிலேன்' என வருந்தி அவள் விமோசனம் கேட்கையில் 'ராமன் பாதத் துளிகள் பட்டுப் பெண்ணுருப் பெறுவாய்' என கௌதமர் விமோசனத் தீர்வுவழங்குகிறார் இது கதையின் மிகச் சுருங்கிய வடிவம்;

அகல்யாவின் கதை தொடர்பான சம்பவங்களை மிக அழகாக சாந்தினி சிவநேசன் அவர்கள் காலஞ்சென்ற அவரது தந்தையார் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவினது தயாரிப்பு நுட்பங்களோடு தன்னுடைய உத்திகளையும் (techniques) இணைத்து நெறிப்படுத்தி பார்வையாளருக்கு வழங்கியிருந்தார். நடனத்துறையில் சிறந்த புலமை, திறமை மற்றும் உயர்வான ஒரு கலைப் பாரம்பரியமுங் கொண்ட சாந்தினி சிவனேசன் அவர்கள் இத்தகையதோர் சிறப்பான மாலை நேர அனுபவத்தை நுண் கலையினூடு வழங்கியதை யாராலும் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும். இனி மேடைப்படுத்தப்பட்ட 'சாப விமோசனம்' என்ற நிருத்ய நாடகத்துக்கு வருவோம்.

### நிருத்ய நாடகம்

கௌதமரின் பர்ணசாலையிருந்த வனத்திற்கு ராமலக்ஷ்மணர்கள் வருகிறபோது பூமியிற் கிடந்த கல் ஒன்றில் ராமனின் பாதங்கள் பட்டதும் கல் பெண்ணுருப் பெறுகிறது. ராமன் யாரிவள் என்று விசுவாமித்திரரிடம் வினவ அவர் பல ஆண்டுகளின் முன்பு நிகழ்ந்த கதை கூறுவதாக இந் நிருத்ய நாடகம் ஆரம்பிக்கிறது. கௌதமரின் ரௌத்ரம், ஸாந்தம், அகலிகையின் சோகம் நாரதர் சந்த ஹாஸ்யம் மற்றும் பயம், வெறுப்பு ஆகிய உணர்வுகளும் நன்கு வெளிப்படும் வண்ணம் அதாவது நவரஸங்களுக்கும் இடம்கொடுத்து கதைச் சம்பவங்கள் பின்னப் பட்டிருந்தன தற்போது சில நிகழ்ச்சிகளில் மேலோங்குகின்ற ஸ்ருங்கார ரஸமானது இந்நிகழ்ச்சியில் ஆங்காங்கே தொட்டுச் சென்றதும் முக்கியமான ஒரு அம்சம் கௌதமர் பாத்திரமேற்ற பெண் முனிவனாகவே வாழ்ந்து விட்டார், முக பாவங்களினூடும், உடலசைவுகளினூடும் கோப உணர்ச்சி மிக அற்புதமாக அவரால் வெளிப்படுத்தப் பட்டது. கௌதமராக வேடமிட்ட இந்திரனிடத்தே உள்ளத்தின் கள்ளம் புற வெளிப்பாடாக இயல்பாக காட்டப்பட்டது.

### மனமும், உணர்வும்

செல்லுமிடமெங்கும் குழப்பமூட்டும நாரதர் மேடைப் பிரவேசம் செய்த போதே சபையில் ஒரு நீண்ட ஹாஸ்ய அலை தவழ்ந்து அடங்கிற்று. இது அந்தப் பாத்திரத்தின் வெற்றியெனக் கொள்ளலாம். அகல்யை பாத்திரம் ஏற்ற பெண் முனிபத்தினிக்குரிய அம்சங்களோடு தன் பங்கினை நன்கு செய்தார். ஒருவர் எந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கிறாரோ அந்தப் பாத்திரத்தின் ஆவி அவருக்குள் நுழைய வேண்டும் என்றும் அதே வேளை அவர் தன் ஸ்வய நிலையினை மறக்கக் கூடாது என்றும் ஒரு ஸ்லோகம் நாட்டிய சாஸ்திரத்தில் உள்ளது. அதற்கேற்ப கலையை எவ்வளவு உள்வாங்கி வெளிப் படுத்துகிறார்களோ அந்தளவுக்கு ஒரு கலை அளிக்கையில் ஜீவனும் லாவண்யமும் நிறைவுத் தன்மையுமிருக்கும். இது எவ்வளவு தூரமுண்மையென்று இந் நிகழ்வுகாட்டிற்று. மொத்தத்தில் இரு நிகழ்வுகளிலும் பங்கெடுத்த மாணவர்கள் அனைவருமே கைவழி நயனமும் கண்வழி மனமும் அவர்களது மனம் சென்றவழி உணர்வும் செல்ல அதனினின்று பிறந்த ஒப்பற்ற சுவையினை தெய்வீகமானதோர் அழகிய அனுபவத்தை அல்லது ஆன்மீகத்தினூடான ஒரு அழகியலனுபவத்தைப் பார்வையாளருக்குத் தந்தனரெனில் அது மிகையல்ல. பரதம் என்ற நுண் கலையினூடாக உடலை கருவியாகக் கொண்டு புலன்களை ஒருமுகப்படுத்தி அவர்களால் வழங்கப்பட்ட அனுபவம் மிக உயர்வானதாகும். சாஸ்திரீயக் கலையானது எல்லாருக்கும் புரிவதில்லை என்ற ஒரு கருத்தும் சிலரிடம் நிலவுகிறது. ஆனால் சமூகத்தில் யாவராலும் நுகர்ந்து புரிதலோடு உள்வாங்கப் படுவதே ஒரு கலையின் சித்தி அல்லது பயன் ஆகும். அவ்வகையில் எல்லோராலும் ரசிக்கப் படும் படியாகவும் புரியும்படியாகவும் கதையம்சங்கள் கோர்க்கப் பட்டு எளிமையான வெளிப்படுத்தல்களோடு மனதைத் தொடும் விதமாக அளிக்கை செய்யப் பட்ட இந்நிகழ்வுக்கு தகுந்த பயன் அல்லது சித்தி கிடைத்திருக்கிறது.

அடுத்து காட்சியமைப்பானது காட்சிகள் யாவும் ஒன்றுடன் ஒன்று இணையும விதமாக இடையே தடங்காது ஒழுங்குற உருவாக்கப் பட்டிருந்தது. மேலும் இரவு நேரம் கௌதமரும் அகல்யையும் தூங்குகிற காட்சியில் பிரயோகிக்கப் பட்ட ஒளியமைப்பும் திரையினை அடிக்கடி மூடித்திறக்காத தன்மையும் இந்திர சபையை ஒரேயொரு அலங்கார வளையோடு எளிமையாகக் கட்டிய விதமும் நல்ல அம்சங்கள் ஒப்பனை மிகையாக இல்லாமல் எளிமயாகவும், நிறத் தெரிவு தெய்வீகத்தோடு தொடர்பு பட்ட மஞ்சள், காவி வண்ணங்களுடன் தொடர்பு பட்டவையாக இருந்ததும் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.

பின்னணி இசையோடு சம்பந்தப்பட்ட பாட்டு பக்க வாத்தியங்கள் என்பனவும் நிகழ்ச்சிகளை நன்கு அணி செய்தன. இந்திரன் பர்ணசாலையினுட்புகும் போதும் கௌதமர் அங்கு நுழையும் போதும் பின்னல் காணப் போகின்ற சூழ் நிலையின் தன்மையானது ஒகன் மூலம் வழங்கப்பட்ட இசைத் தொகுதி மூலம் பார்வையாளருக்கு உணர்த்தப்பட்டது. நட்டுவாங்கம் பற்றியுமிங்கு கூற வேண்டும்- ஜதிகள் ஒவ்வொன்றும் தெளிவான உச்சரிப் போடும் வல்லினம் மெல்லினத்துக்குரிய அழுத்தங்களோடும், தேவையான ஏற்ற இறக்கங்களுடன் ஆடுபவர் காட்டும் உணர்வுகளையும் உணரக் கூடிய விதமாக மிக உயர்வாக இருந்தது. இவரது நட்டுவாங்கத்திற்காணும் இத்தகு சிறப்பம்சங்களை ஏனையோரும் பின்பற்றவோ அன்றிப் பயிலவோ வேண்டும்.

# 100 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்

(ஆவரங்கால்)

லயன்ஸ் கழகமும் கியூமெடிக்கா நிறுவனமும் இணைந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வளலாய் கிராமத்தில் அண்மையில் மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றினை நடத்தியுள்ளன.

வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலையத்தில் இடம் பெற்றஇம் மருத்துவ பரிசோதனைமுகாமின் போது, குருதி, சிறுநீர், கண் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டதுடன்,

கண்பார்வை குறைந்த 100 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

[உ-57]

## தையல் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கிழக்கு விவேகானந்தா இளைஞர் கழகத்தினரால் பெண்களுக்கான தையல்ப்பயிற்சி நெறி ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இப்பயிற்சி நெறிக்கான தையல் இயந்திரங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

(உ-59)

## உதைபந்தாட்டம்

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக் நடத்தும் 22 வயதிற்கு உட்பட்டோருக்கான அரைஇறுதிஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பாவிளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன.

பிற்பகல் 3.30 மணிக்கு கலைவாணி விளையாட்டுக் கழக அணி எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுச் கழக அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு சென்ரூர் விளையாட்டுக் கழக அணி எதிர் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

(உ-110

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

[கி-1517]

# இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தில் எந்தவிதமான வெட்டும் இல்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே நிவாரணம் பெற்று வந்த குடும்பங்கள் அனைத்திற்கும் இம் மாதம் நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ்.செயலகப் புனர் வாழ்வுப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மாதம் நிவாரணம் பெற்ற குடும்பங்கள் அனைத்திற்கும் இம் மாத நிவாரணம் வழங்கவிருப்பதாகவும், சில கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பது போல் யாழ் குடா நாட்டில் இடம்பெயர்ந்த எவரது நிவாரணமும் வெட்டப்படவில்லையெனவும், வழமைபோல் நிவாரணம் பெற்று வந்த அனைவருக்கும் இம் மாத நிவாரணம் வழங்க பிரதேச செயலகங்கள் மூலம்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார். (வ)

கண்ணைக்கவரும் தங்க
நகைகளை
உங்கள் எண்ணம் போல்
செய்து தருபவர்கள்

**சாரங்கா நகைமாடம்**

177/4. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-1503]

**யாழ் மாநகர---**

கோரிக்கைகளில் சில வருமாறு:

★ மாநகரசபை ஊழியர்களை மனித நேயத்துடன் அணுகுதல்.

★ சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் விசுவாசமாகக் கடமையாற்றி வரும்காரணத்தால் பழிவாங்கும் நோக்குடன் புதிதாகவிடுக்கப்பட்ட கட்டளைகளை வாபஸ் பெறுதல்.

★ பல வருடகாலமாக நிரந்தரமற்ற நிலையில் ஊதிய பயிற்சி பெற்றுக் கடமையாற்றும் ஊழியர்களை மீள அமைக்கப்பட்ட ஆளணி அடிப்படையில் நியமித்து அவர்களை சேவையில்நிலைப்படுத்தல்.

★ சுகாதாரப் பகுதியிலுள்ள ஆளணியினரை நடைவாயிரீதியில் நடைமுறையிலுள்ள சுகாதார சேவையின் அடிப்படையில் கணித்தல்.

★ ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருக்கும் அதே கட்டமைப்பை மாநகர சபையில் எச்சந்தர்ப்பத்திலும் மாற்றக் கூடாது.

★ புதிய ஆணையாளரால் விடுக்கப்பட்ட பிரயாணப் படி, விடுமுறைக் காலவேதனம், காரியாலயக் கொடுப்பனவு தொடர்பான புதிய சுற்றறிக்கைகளை உடனடியாக வாபஸ் பெறுதல்.

★ கடந்த 10 வருடகாலமாக ஊள நிலைமைக்குஏற்ப தமது சேவையை மக்களுக்கு வழங்கி வந்த எமது சுகாதார வைத்திய அதிகாரியை பணியாற்ற முடியாத வகையில் ஏற்படுத்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு அவருடைய பதவி விலகல் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளாது அவர் தொடர்ந்து சேவையாற்ற நடவடிக்கை மேற்கொளுதல் போன்ற பல கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். (ந)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பிற்பகல் ஒருமணிக்கு கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ்'பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் எஸ் சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந)

★ ★ ★

[ஆனைக்கோட்டை]

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் மு. அருணாசலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, யாழ்.கல்வித் திணைக்கள பொறியியலாளர் மா.சிவபாலன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். [செ-125]

## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 19வது ஆண்டு நிறைவுவிழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் அமைந்துள்ள கில்னர் மண்டபத்தில் தலைவர் சே.செல்வக்குமார் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (ந-5)

# கோகிலா மகேந்திரனின் நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கலைஇலக்கியக்களத்தின் 46வதுஒன்றுகூடல்நிகழ்வில்கோகிலாமகேந்திரன்எழுதிய விஞ்ஞானக் கதைகள்பண்டிதர் சி அப்புத்துரையின் நற்சிந்தனைகள் நாற்பது ஆகியஇருநூல்களின் வெளியீட்டுவிழா இன்றுநடைபெறும்.

சைவப்புலவர் சு.செல்லத்துரையின் தலைமையில் யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இன்று காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிவத்தமிழ்செல்வி கலாநிதிதங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்மேலதிக அரசஅதிபர் து வைத்திலிங்கம்ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ந)

**ஜனாதிபதிக்கு--**

மகாநாடு ஒன்றினை நடத்தினார்

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி எம். பிக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பாக லொக்குபண்டார செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ரூபாவின் பெறுமதியை மிதக்கவிடப்படுவது தொடர்பாக அமைச்சரவைக்கும் பாராளு மன்றத்திற்கும் அறிவிக்கப்படவில்லை. இத்தகைய செயலானது அரசியலமைப்பினை மீறுவதாகும்.

இதனடிப்படையில் தான் ஜனாதிபதி மீது ஐக்கியதேசியக்கட்சி குற்றப்பிரேரணையைச் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்தார். (வ)

**அரச---**

மேற்கொள்ளப்பட்டஅபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியில் முடிவடைந்ததை அடுத்தே இந்த அவசரஉத்தரவைஅவர் பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ

**யுத்தநிறுத்த--**

வது கவலை அளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நோர்வே இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழ்க் கட்சியினர் கருத்து வெயிட்டுள்ளனர். (வ)

**ஜனாதிபதி---**

ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஒரு தீர்வுகாணப்படுவதையே இந்தியா விரும்புகிறது

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் காண்பதில் இந்தியாவின் பங்களிப்பு அவசியமாக இருப்பதால் இலங்கையின் நிலைவரம் குறித்து அவ்வப்போது இலங்கை அரசு இந்தியாவுக்கு அறிவித்துவந்துள்ளது.

பாகிஸ்தானின் செயற்பாடு காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக சார்க் மாநாட்டை நடத்த முடியவில்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

**புலிகளுடன்...**

யுத்த நிறுத்த அறிவிப்புக்கள் விடுதலைப்புலிகளின் ஒரு தந்திரோபாய நடவடிக்கைகளாகவே கடந்த காலத்தில் அமைந்துள்ளது. இதனால் தான் இந்தயுத்த நிறுத்த அறிவிப்பை நான் நிராகரிக்கிறேன்.

விடுதலைப் புலிகள் உண்மையில் யுத்தத்தை நிறுத்த விரும்பவில்லை அதேவேளை குறிப்பிடத்தக்க அரசியல் விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்தவும் அவர்கள் விரும்பவில்லை என்றும் ஜனாதிபதி அப்பேட்டியின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை ஜனாதிபதி சந்திரிகா இந்தியக் குடியரசுத் தலைவர் கே ஆர் நாராயணனையும் சந்தித்துபேச்சு நடத்தியுள்ளார் என்றும் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது (வ)

# பயண திகதிக்குமுன்னதாக பயணச்சீட்டைப் பெறுக

(யாழ்ப்பாணம்)

சிற்றிஒவ் றிங்கோகப்பல் பயணத்திற்கு பதிவுசெய்து கொண்டவர்கள் பயணத்திகதிக்குமுன்பாகவே பயணசீட்டுக்குரியகட்டணமான 1,575ரூபாவை செலுத்தி பயணச்சீட்டை பெற்று பிரயாணத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறுறான் அலுவலர் பிறேம்குமார்கப்பல்பயணிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில் பயண அனுமதி கிடைத்தும் இறுதிநேரம் வரையும்ரிக்கற் பெற்றுக் கொள்வதால் பற்சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்தமாதம் 1ந்,6ந்,8ந்,13ந் திகதிகளில் திருமலை செல்லவுள்ள1600 பயணிகளுக்கு கப்பல்பயணப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் இதில்பல் கலைக்கழக மாணவர்களும் அடங்குவர் என்றும்அவர் தெரிவித்தார் கடந்தவியாழக்கிழமை புறப்பட்டுச்சென்ற கப்பலிலும்சுமார் 10பல்கலைகழகமாணவர்களும் விமானத்தில்3மாணவர்களும் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. (வ-12)

## இன்று நாட்டுக் கூத்து

(மண்டைதீவு)

நெருஞ்சிமுனை கலையரங்கில் இனறு இரவு தென்மோடி நாட்டுக்கூத்து நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மதனராஜாவும் கலந்து கொள்வர். (ந-11)

கோகிலா மகேந்திரனின்
**விஞ்ஞானக் கதைகள்**
பண்டிதர் சி. அப்புத்துரையின்
**நற்சிந்தனைகள் நாற்பது**
நூல்களின்
**வெளியீட்டு விழா**

இடம்: யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
காலம்: 25 - 02 - 2001 (ஞாயிறு) காலை 9.30
தலைமை: சைவப்புலவர் சு. செல்லத்துரை.

விருந்தினர்:-
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
உயர்திரு து. வைத்திலிங்கம்
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
ஓவியர் மானியூர் ரட்ணேஸை கௌரவித்தல்
கௌரவிப்பவர்: திரு ஆறுதிருமுருகன்
ஆய்வுரைகள்: திருமதி கலாபொன்னம்பலம்
திருமதி அ. வேலுப்பிள்ளை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலை இலக்கியக் களத்தினர்.

(2561)

நேரடி CD மூலம் புதிய, பழைய பாடல்களை கசட்டில் பதிவு செய்யவும் CDயில் இருந்து CDக்கு பதிவு செய்பவும் நவீன வீடியோ மிக்சிங் கமறா மூலம் படப்பிடிப்புகள் செய்யவும் மற்றும் உள் புற. வெளிப்புற படப்பிடிப்புகள் [Photo] மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும்

**மேகாஸ் வீடியோ ஓடியோ அன் மிக்சிங் ஸ்ருடியோ**

23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/1516)

### காணவில்லை

யாழ் மத்திய கல்லூரியில் 17/02/2001 அன்று நடைபெற்ற சிரமதானத்தின் போது ச. பிரகலாதன் ஆகிய எனது விஷேட அடையாளஅட்டையும்.(இல 0902039427) பணம் ரூபா500/-ம் பாடசாலை அடையாள அட்டையும் தொலைந்து விட்டன. கண்டெடுப்பவர்கள் யாழ். மத்திய கல்லூரி அதிபரிடம் அவற்றைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (கி/1522)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
பிரசாந் - ஷாலினி
நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
10-30, 2-30 ப. நே)
(புதிய வெளியீடு)
CD பிரதி
(கி, 1482

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.